ஒத்த கல்லூரியை இங்கு வைத்தால் என்ன என்ற கொள்கையின் அடிப்படையிலே, 1965-ஆம் ஆண்டிலேயிருந்து பெண்கள் மட்டும் படிப்பதற்கு ஏற்றவகையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டது. நான்காண்டுக் காலமாகப் பெண்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள். அதில் ஆண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மகளிர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆண்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதை உணர்ந்தது, ஏனென்றால், பரிசோதிக்கச் செல்லுகின்ற நேரத்தில் ஆண் நோயாளிகளைப் பரிசோதிக்க ஆண்கள் இருந்து, உடலைப் பரிசோதிக்கும் நேரத்தில் பக்கத்திலே பெண்கள் இருந்து பார்க்க வசதியாக இருக்கும். பெண்களே ஆண் நோயாளிகளைப் பரிசோதிப்பதென்றால் அதனால் பல சங்கடங்கள், இடர்பாடுகள் இருப்பதால், கற்றுக்கொள்ளும் நிலையில், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து பரிசோதனை செய்ய வேண்டிய நிலையிருந்தால் அந்தக் கஷ்டங்கள் இல்லாமல் இருக்குமென்று கருதப்பட்டது. எனவே, ஆடவரும் சேர்ந்து படிக்கலாம் என்று 6—9—69–இல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

Master Plan for Madras City

* 513 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the Director of Town-Planning has drawn up a Master Plan for the development of Madras Metropolitan area;

(*b*) if so, the salient features of the plan; and

(*c*) the area covered by the plan?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவையின் முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநயகம்: சார், அந்த மாஸ்டர் பிளான் தயார் செய்யும்பொழுது, தெற்கேயிருந்து வருகிற பிரயாணிகள் வடக்கே போக வேண்டுமென்றால், சென்னையைத் தொடாமலேயே, மவுண்ட் ரோடு, கிண்டியிலிருந்து வேறு பாதை வழியாக நெல்லூர் ரோட்டுப் பாதையிலே சேர்க்க முன்பு யோசனை இருந்தது. ரிங் ரோடு, பைப்பாஸ் ரோடு அல்லது ரவுண்ட் ரோடு, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து இப்பொழுது போட முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கான திட்டமும் மாஸ்டர் பிளானில் போடப்பட்டிருக்கிறது. சுற்றுச்சாலைகளும், புறச்சாலைகளும் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மெரினு பீச் ரோட்டைக்கூட, கடற்கரையோரமாகக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்

---

[a] இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பட்டிருக்கிறது. கூடுமானவரையில் போக்குவரத்து உள்ளே வந்து இடைஞ்சல் ஏற்படாத அளவுக்கு, நகரைச் சுற்றிச் செல்ல சுற்றுச் சாலைகள் ஏற்பட முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் குறிப்புகளில் கல்வி, தொழில், மருத்துவமனை இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். 1991-ஆம் வருஷத்திலே சென்னை நகரச் சுற்றுப் புறத்தில் 48 இலட்சம் பேருக்கும் மேல் இருப்பார்கள் என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயில் இருப்பதைப்போல், பம்பாயில் சுற்றியிருக்கும் பகுதிகளில் இரயில்கள் போவதைப் போல், சென்னையிலும் சென்னையைச் சுற்றிப் பிரயாணம் செய்யக் கூடியதற்கான சிறப்பு அம்சம் இல்லை. இதை அரசாங்கம் வற்புறுத்தி அந்த வசதியைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரயில் விடுவதன் இன்றியமையாமையைப்பற்றி இந்தத் திட்டத்தில் என்ன வகுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்து மனத்தில் கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. விநாயகம்: மேஜைமீது வைத்திருக்கும் அறிக்கையிலிருந்து மவுண்ட் ரோட்டிலே வருகிற போக்குவரத்தை, நெரிசலைக் குறைக்க ஒரு 'ப்ளை ஓவர் பிரிட்ஜ் அட் ஜெமினி' என்று ஒரு திட்டம் இருந்தது. அதன் வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்று முன்பு பதில் சொன்னார்கள். இதில் இந்தத் திட்டம் வரவில்லையே. ஒருவேளை இது சென்னை மாநகராட்சியின் ஆட்சியின் கீழ் போடப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஜெமினிக்குப் பக்கத்திலே நெரிசலைத் தவிர்ப்பதற்காக மேம்பாலம் போட திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே அது வரவில்லையென்றாலும், சென்னை நகரத்தின் வளர்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலே ஹைவேஸ், பெருவழித்துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

செவிலியர் பயிற்சி

* 514 வினா. திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மருத்தவ மனையை ஒட்டிய சென்னை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பயிற்சிப் படிப்பு ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?